1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) தமிழ் மாநிலத்திலிருந்து தென்னிந்திய மாநிலங்களில் ஓடும் சாதாரண டாக்ஸிகளின் எண்ணிக்கையின் விவரம் பின் வருமாறு:—

மாநிலத்தின் பெயர்.	இதுவரை வழங்கப்பட்ட டாக்ஸிகளின் எண்ணிக்கை.
ஆந்திரப்பிரதேசம்	133
கேரளா	228
மைசூர்	..

Refresher Training for Government Car Drivers

* 110. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal to give a refresher training to the Government car drivers to prevent the occurrence of a large number of accidents caused by the car drivers; and

(b) if so, the details thereof?

அரசு கார் ஓட்டுநர்களுக்கு மறு பயிற்சி

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கார் ஓட்டுநர்களால் அதிக விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க அரசு கார் ஓட்டுநர்களுக்கு மறு பயிற்சிகள் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா?

(இ) ஆமெனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கார் ஓட்டுநர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதிலே பல கோளாறுகள் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. அந்த அலுவலகங்களிலே லஞ்சம் காரணமாக, சரியாகக் கார் ஓட்டத் தெரியாதவர்கள் லைசென்சுகள் வாங்கிவிடுகிறார்கள். அதன் காரண மாக விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன. ஆகவே அந்த முறையைச் சரியாக ஆக்குவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாக ஒரு குறையினைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்த டிரைவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும் முறையினை சீரமைக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்து, பல திட்டங்களை அமுலாக்கியிருக்கிறது. ஒவ்வொரு தடவையும், அவர்கள் தங்கள் லைசென்சை எடுக்கின்றபோதோ அல்லது புதுப்பிக்கின்றபோதோ 'ரியாக்ஷன் டைம் டெஸ்ட்', 'விஷன் டெஸ்ட்' போன்றவற்றுக்கெல்லாம் உட்பட வேண்டும் என்று அதற்காக விதிகளைத் திருத்துவதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அதே போல ஏதேனும் ஒரு இழப்பு, 'ஃபேடல் ஆக்சிடன்ட்' ஏற்பட்டு அதிலே அந்த டிரைவர்கள் ஈடுபட்டுவிடுவார்களானால், மறுபடியும் அவர்களை 'மெடிகல் இன்ஸ்பெக்ஷனுக்கும்', 'விஷன் டெஸ்ட்டுக்கும்' உள்ளாக்க வேண்டும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, பயணிகளை ஏற்றிச் செல்கிற பஸ்களின் வேகத்தை மட்டுப்படுத்துவதற்கு ஸ்பீடா மீட்டரையே இத்தனை மைலுக்கு மேல் போகவிடாத நிலையை உருவாக்கி விபத்தைத் தவிர்க்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஸ்பீடா மீட்டர் மட்டுமல்ல, சில சமயங்களில் மெதுவாகப் போவதாலேகூட விபத்துக்களிலே சிக்கிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடும். ஆகவே Driving habits should be improved அந்த வகையிலேதான் டிரைவர்களைப் பொறுத்தவரையிலே அவர்களுடைய நடைமுறை விதிகளை கொஞ்சம் சீராக்குவதற்கும், அதிலே ஸ்டிரிக்டாக நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, does this apply to the bus-drivers or the car-drivers?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, it is for both.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்த ஓட்டுநர்கள் அதிகமான வேகத்திலே ஓட்டாமலிருப்பதற்கு வெளிநாடுகளிலே அவர்களுடைய குடும்பங்களின் படங்களை அவர்களுக்கு முன்னால் வைத்திருப்பது போல, இங்கேயும் அவர்களுடைய குடும்பத்தினுடைய படத்தை அவர்களுக்கு முன்னால் வைப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அவர்களுடைய குடும்பத்தினுடைய படங்களை முன்னாலே வைத்தால், அதனாலே சில சமயங்களில் பாசமும் ஏற்படும், பயமும் ஏற்படும். இரண்டுமே விபத்துக் களுக்குக் காரணமாக அமைகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தனியார் கார்களிலேயும் ஓட்டுகிறார்கள். அப்பொழுது யாருடைய குடும்பத்தினுடைய படத்தை வைப்பது? காரின் சொந்தக்காரருடைய படத்தையா அல்லது ஓட்டுந ருடைய படத்தையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது மிகவும் சிக்கலான கேள்வி.

Cheran Bus Transport Corporation

*111. *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether an All- Party delegation met the Collector of Coimbatore district and submitted to him a representation regarding Cheran Bus Transport Corporation on 24th December 1972;

(*b*) if so, the subject-matter of the representation submitted; and

(*c*) the action taken thereon by the Government?

சேரன் பேருந்து போக்குவரத்துக் கழகம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சர்வ கட்சியைச் சேர்ந்தவர்கள் சேரன் பேருந்து போக்குவரத்துக் கழகம் சம்பந்தமாக 24—12—1972 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து மனு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனரா?

(இ) ஆமெனில், எது குறித்து அம்மனு சமர்ப்பிக்கப்பட்டது?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?